# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074765

C

1. District மாவட்டம் : திருச்சிராப்பள்ளி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 07 Date: நாள் 30.10.2021

2. (i) Act சட்டம்: Cr.P.C Sections பிரிவுகள்: 102
(ii) Act சட்டம்: Prevention Of Corruption Sections பிரிவுகள்: 7(A)
(iii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 29.10.2021 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 17.00 hrs Time to : நேரம் வரை 21.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2021 Time : நேரம் 11.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 5 Km மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ப. மகேந்திரன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பரமன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.05.1972 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
Date of Issue : வழங்கப்பட்ட நாள் – Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
(f) Occupation : தொழில் துணை வட்டாட்சியர் (g) Address : முகவரி பட்டா வழங்கல் அலுவலகம், திருச்சிராப்பள்ளி கிழக்கு வட்டம், திருச்சிராப்பள்ளி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

அடையாளம் தெரியாத இடைத்தரகர்கள் / தனியார்கள்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று **30.10.2021** காலை **11.00** மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திரு.ப.பிரேம்குமார், துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம், திருச்சிராப்பள்ளி என்பவர் ஆஜராகி **29.10.2021**ம் தேதி திருச்சி மாவட்டம், திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் சோதனை செய்தபோது தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அவர் கொடுத்த வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகளின் (மகஜர்) விபரங்கள் பின்வருமாறு: 30.10.2021 திருச்சிராப்பள்ளி அனுப்புநர் ப.பிரேம்குமார், துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அம்மா, பொருள்: திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டார போக்குவரத்து

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ……………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant [signature] 30/10/2021
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station [signature]
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30.10.2021 / 12.30 hrs

Name: பெயர் P. அருள்ஜோதி,
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. எண் ……
ஊ.த.க. பிரிவு,
திருச்சி.

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.07/2021ன் முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி.......

அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி . . . திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி ரகசிய தகவலின் அடிப்படையில், 29.10.2021ம் தேதி, மாலை சுமார் 16.00 மணியளவில், திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்திலிருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன், மாவட்ட ஆய்வு குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட நானும் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 17.00 மணி முதல் 21.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொண்டு, சோதனையின்போது கேட்பாரற்று கிடந்த ரூ.60,000/–ம் கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் தயார் செய்யப்பட்டது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இத்துடன் 29.10.2021ம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (Sd) (xxxx)ப.பிரேம்குமார், 30.10.2021 Submitted to the Court of the Hon'ble Special Judge for trial of cases under the Prevention of Corruption Act-1988, Trichy. Received this report and registered a case in Trichy V&AC Cr.No.07/2021 u/s 102 Cr.P.C r/w 7(A) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) on 30.10.2021 at 11.00 hrs (Sd) (xxxx), 30/10/2021, Inspector of Police, V&AC, Trichy. திடீர் சோதனை செயல்முறை:– இன்று 29.10.2021 மாலை சுமார் 17.15 மணிக்கு திருச்சி – திண்டுக்கல் சாலையில் பிராட்டியூரில் தரைத்தளம் மற்றும் இரண்டு தளத்துடன் அமைந்துள்ள அரசு கட்டிடத்தில் திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தை ஆய்வுகுழு அலுவலரால் நியமிக்கப்பட்ட திரு.ப.பிரேம்குமார், துணை வட்டாட்சியர், வட்ட வழங்கல் அலுவலகம், திருச்சி கிழக்கு வட்டம், திருமதி.ப.அருள்ஜோதி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி மற்றும் அவர்களது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள். திருச்சி மாநகரம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணியினை செய்து தருவதற்காக இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், இடைத்தரகர்கள் மேற்படி பொது பணியாளர்களுக்காக, பொது மக்களிடமிருந்து அரசு நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று பொது பணியாளர்களுக்கு கொடுப்பதாகவும், அதில் தாங்களும் பயன் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் இன்று 29.10.2021 மாலை சுமார் 17.00 மணிக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரால் நியமிக்கப்பட்ட துணை வட்டாட்சியர் மற்றும் விஜிலென்ஸ்

குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. மேற்படி அலுவலகம் மூன்று தளங்கள் கொண்ட கட்டிடமாகும். வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அருகே தகுதி சான்று புதுப்பித்தலுக்காக வாகனங்கள் இருந்தன. அதன் அருகே நின்று கொண்டிருந்தவர்களை அலுவலகத்திற்குள்ளே அழைத்து வந்து அமரவைக்கப்பட்டது. மேற்படி அலுவலக வளாகத்திற்கு கிழக்கு பக்கம் பிரதான நுழைவாயில் அமைந்துள்ளது. கட்டிடத்தின் தரைத்தளத்தில் கிழக்குபுற பிரதான வாயிலும், அதற்கு முன்புறம், சாய்வு படிக்கட்டு மற்றும் படிக்கட்டுகளும், போர்ட்டிகோவும் அமைந்துள்ளது. கட்டிடத்தின் தெற்கு பக்கம் முதல் தளத்திற்கு செல்லும் படிக்கட்டு அமைந்துள்ளது. அந்த முதல் தளத்தில் பதிவறை மற்றும் கூட்டரங்கமும் மற்றும் இரண்டாவது தளத்தில் துணை போக்குவரத்து ஆணையர் அலுவலகமும் மற்றும் இணை போக்குவரத்து ஆணையர் அலுவலகமும் அமைந்துள்ளது. தரைத்தளத்தில் வடக்கே மோட்டார் வாகன ஆய்வாளர் அறை மற்றும் பாண்டன் அலுவலர்கள் அறை அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்தின் தரைத்தளத்தின் உள்ளே உள்ள ஹாலில், பொது மக்கள் அமரக்கூடிய இருக்கைகளும், அதன் மேற்கே வட்டார போக்குவரத்து அலுவலர் அறை உள்ளது. ஹாலின் தெற்கே கண்ணாடியால் தடுக்கப்பட்ட இரண்டு அறைகளும், அதன் தென்புறம் அலுவலர்கள் அமர்ந்து பணிபுரியும் அறை உள்ளது. அந்த அறையில் ஏழு மேஜைகள் அடுத்தடுத்து போடப்பட்டு, ஏழு இருக்கைகள் உள்ளன. அந்த இருக்கைகளை ஒட்டி ஜன்னல்கள் அமைந்துள்ளது. மேற்படி அறையில் அலுவலர்கள் அமர்ந்திருந்தார்கள். அங்கிருந்த அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை துணை வட்டாட்சியர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்த பின்பு, அங்கிருந்தவர்களை தனித்தனியாக விசாரித்து சோதனை செய்தபோது அவர்கள் (1) திரு.செல்வம்சவரிமார்ஷல், நேர்முக உதவியாளர் என்றும், அவரிடம் ரூ.3000/–ம், (2) திருமதி.சாவித்திரி, (பி) கண்காணிப்பாளர், என்றும் அவரிடம் ரூ.300/–ம், (3) திரு.சரவணன், கணக்கர், என்றும் ரூ.1300/–ம், (4) திருமதி.தமிழ்செல்வி, (பி–3) இளநிலை உதவியாளர் என்றும் ரூ.400/–ம், (5) திருமதி.மகாலட்சுமி, (அ–3) இளநிலை உதவியாளர் என்றும், ரூ.350/–ம், (6) திரு.பிரபாகரன், (பி–4) இளநிலை உதவியாளர் என்றும் ரூ.320/–ம் மற்றும் (7) திரு.விஜய்ஆனந்த், (அ–2) இளநிலை உதவியாளர் என்றும் ரூ.480/–ம் வைத்திருந்தார்கள். மேற்படி அலுவலர்கள் அது தங்களுடைய சொந்தபணம் என தெரிவித்ததின்பேரில், பணியாளர் கையிருப்பு பதிவேடு 29.10.2021 தேதிக்கான பதிவுடன் ஒப்பிட்டு பார்த்து சரியாக இருந்ததால் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் ஹாலில் அமரசெய்திருந்த தனிநபர்களிடம் விசாரணை செய்ய அவர்கள் (1) திரு.சர்தார், த/பெ முஷாகர்உசேன், என்றும் தனது வாகனமான TN 45 AK 6820 ஆட்டோவிற்கு தகுதிசான்று புதுப்பிக்க வந்ததாகவும், அவரிடம் ரூ.2650/–ம்,

(2)திரு.அசோக்குமார், த/பெ.தட்சிணாமூர்த்தி என்றும், தான் ராஜலிங்கம் டிரான்ஸ்போர்ட் மேனேஜர் என்றும், TN 45 BA 2156, TN 45 BA 2165 ஆகிய வாகனங்களுக்கு பர்மிட் சரண்டர் குறித்து விசாரிக்க வந்ததாகவும், அவரிடம் ரூ.1,500/-ம், (3) திரு.சேவியர் ப்ராங்களின் த/பெ ரிச்சர்டு என்றும், தான் TN 45 BC 6234 என்ற வாகனத்திற்கு FC க்காக வந்ததாகவும், அவரிடம் ரூ.500/-ம், (4) திரு.சண்முகம் த/பெ தண்டாயுதபானி என்றும், தான் TN 45 BB 3749 என்ற வாகனத்திற்கு FC க்காக வந்ததாகவும், அவரிடம் ரூ.2000/-ம், (5) திரு.மணிபாரதி த/பெ தன்ராஜ் என்றும் தான் TN 45 BR 3051 என்ற வாகனத்திற்கு FC க்காக வந்ததாகவும், அவரிடம் ரூ.3000/-ம், (6) திரு.வாசுதேவன், த/பெ பாலசுப்ரமணியன், மற்றும் திரு.கணேஷ் த/பெ திருஞானம் ஆகிய இருவரும் SBIOA பள்ளி பேருந்திற்கு FC க்காக வந்ததாகவும், மேற்படி நபர்கள் மதியத்தில் இருந்து மோட்டார் வாகன ஆய்வாளருக்காக காத்திருப்பதாக தெரிவித்தனர், அவர்களிடம் சோதனையின் போது பணம் எதுவும் இல்லை, மேற்படி நபர்களிடம் இருந்த பணம் குறித்து கேட்க அவர்களுடைய சொந்த பணம் என்று தெரிவித்ததின் பேரில் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும், பின்னர் ஆவணங்களுடன் நின்றிருந்தவர்களை விசாரிக்க அவர்கள் தன் பெயர் 1) திரு.பரூக், வயது.39/2021, த/பெ.மஃபுல், 38ஏ, பருப்புகார தெரு, பாலக்கரை திருச்சி என்றும், 2) திரு.குமார், வயது.54/2021, த/பெ.செல்வராஜ், எண்.48, 4வது தெரு, துரைசாமிபுரம், திருச்சி என்றும் தாங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்திற்கு அலுவல் பணி தொடர்பாக வரும் பொதுமக்களுக்கு உதவி செய்து அதற்காக அவர்கள் கொடுக்கும் தொகையை பெற்று கொள்வதாக தெரிவித்தனர். மேற்படி இருநபர்களிடம் பணம் எதுவும் இல்லை. மேலும் மற்றொரு நபரை விசாரணை செய்ய 3) திரு.சேதுராஜ் வயது 59/2021, த/பெ.மாணிக்கம் செட்டியார், 3/109ஏ, புதுத்தெரு, சோமரசம்பேட்டை, திருச்சி என்றும், தான் FC பணி தொடர்பாக விசாரிக்க வந்திருப்பதாக தெரிவித்தார், ஹாலில் அவருக்கு பின்னால் இருந்த டேபிளுக்கு அடியில் கத்தையாக பணம் கிடந்தது. அந்த பணத்தை துணை வட்டாட்சியர் மூலம் எண்ணிப்பார்க்க அதில் ரூ.53,000/- இருந்தது. அந்த பணம் குறித்து திரு.சேதுராஜிடம் விசாரிக்க, தன்னுடையது இல்லை என தெரிவித்தார். அது குறித்து அங்கிருந்தவர்களிடம் விசாரிக்க யாரும் உரிமை கோராததால், மேற்படி பணம், திருச்சி மேற்கு வட்டார போக்குவரத்து அலுவலத்தில் பணிபுரிபவர்களுக்கு கையூட்டாக கொடுப்பதற்காக, பொதுமக்களிடம் இருந்து கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருந்திருந்த பணமாக இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி மொத்த பணம் ரூ.53,000/- காவல் ஆய்வாளர் திருமதி.ப.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், தரைத்தளத்தில் நின்று கொண்டிருந்த பொது

மக்கள் MV ஆய்வாளருக்காக பிற்பகலில் இருந்து காத்திருப்பதாக தெரிவித்து அவரவர்களாக கலைந்து சென்றனர். பின்னர், மேற்படி அலுவலகத்தின் உள்ளே இருந்த நேர்முக உதவியாளரிடம் வட்டார போக்குவரத்து அலுவலர் குறித்து கேட்க, மேற்படி அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் பணியிடம் காலியாக இருப்பதால் அரியலுார் வட்டார போக்குவாத்து அலுவலர் கூடுதல் பொறுப்பாக கவனித்து வருவதாகவும், மேலும், அலுவலகத்தின் உள்ளே இருந்த MVI அறையில் ஆய்வாளர் திரு.சுந்தரராமன் குறித்து கேட்க திரு.சுந்தரராமன் MVI வெளியே சென்றிருப்பதாக தெரிவித்தார். பின்னர் அலுவலக பணியாளர்கள் குறித்து கேட்க திரு.பாலகிருஷ்ணன், இளநிலை உதவியாளர், ஓட்டுனர் உரிமம் தொடர்பாக நீதிமன்றம் சென்றுள்ளதாகவும், திரு.பாஸ்கரன், அலுவலக உதவியாளர், மதியம் அலுவலகத்திற்கு வரவில்லை என்றும், ஒட்டுனர் திரு.பொன்ராஜ் பணி முடித்து சென்றுவிட்டதாகவும் தெரிவித்தார். பாண்டன் பணியாளர்கள் திரு.ரிச்சர்டுராஜ்குமார், த/பெ.ஜோசப் புஷ்பராஜ் மற்றும் திரு.ராம்பிரசாத், த/பெ.சுதர்ஷன் ஆகியோரும் அவர்களது இருக்கையில் இருந்தனர். அவர்களை சோதனை செய்ய அவர்களிடம் இருந்த பணம் தலா ரூ.200/– பற்றி கேட்க அப்பணம் தனது சொந்த பணம் என்றதால் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னார் வளாகத்தின் வெளியே FC-க்காக நின்று கொண்டிருந்த வாகனஙகள் அருகே சிதறிக்கிடந்த பணத்தை துணை வட்டாட்சியர் மூலம் எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.7000/–ம் இருந்தது, அஙகிருந்தவர்களிடம் விசாரணை செய்ய அப்பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அது லஞ்சப்பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் காவல் ஆய்வாளர் திருமதி.அருள்ஜோதி அவர்களால் இந்த திடீர் சோதனையின் மேல் நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்கண்ட அலுவலகத்தின் நேர்முக உதவியாளர் திரு.செல்வம் சவரிமார்ஷல் என்பவரிடம் கொடிநாள் வசூல் குறித்து கேட்க 28.10.2021 வரை வசூல் செய்த கொடிநாள் பணத்தை வங்கியில் செலுத்தப்பட்டது என்றும், தற்சமயம் கையிருப்பு எதுவும் இல்லை என தெரிவித்தார். பின்னர், பின்வரும் ஆவணங்கள் (1) இன்று (29.10.2021) DL-32, DL Endorsement-16, Learners License-75 என்பதற்கான கணினி ஸ்டேட்மெண்ட், 2) இன்றைய(29.10.2021) பணியாளர்கள் கையிருப்பு பதிவேடு நகல், 3) 2021 ஆம் ஆண்டைய அக்டோபர் மாத வருகைப்பதிவேடு சான்றொப்பமிட்ட நகல்களை மேல்நடவடிக்கைகாக திருமதி.அருள்ஜோதி, காவல் ஆய்வாளர் அவர்களால் கைப்பற்றப்பட்டது. மாலை சுமார் 18.00 மணியவில் பெண் பணியாளர்களை வீட்டிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டது. மேலும், மேற்கண்ட 3 தனிநபர்களிடமும் விசாரணைக்கு தேவைப்படும்போது ஆஜராகும்படி அறிவுறுத்தி அனுப்பிவைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறை இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி வேண்டுகோள் கடிதத்துடன்

கூடிய திடீர் சோதனை செயல்முறையை (மகஜர்) பெற்று திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.**07/2021** u/s 102 Cr.P.C r/w 7(A) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) ன்படி இன்று **(30.10.2021) 11.00** மணிக்கு வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சிராப்பள்ளி, திருச்சி கிழக்கு வட்டம், வட்ட வழங்கல் அலுவலகம், துணை வட்டாட்சியர், திரு.ப.பிரேம்குமார் கொடுத்த **30.10.2021** தேதியிட்ட கடிதம் மற்றும் **29.10.2021** தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இந்த முதல் தகவல் அறிக்கையில் இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

30/10/2021
Inspector of Police,
V&AC, Trichy.